உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் :திருமதி.ம.பேச்சியம்மாள்,
உதவி இயக்குநர்
இடம் : தூத்துக்குடி.

செயல்முறை ஆணை எண் அ1/ 805 /2020, நாள் 13.03.2020.

பொருள் : பணியமைப்பு –வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்புப் பிரிவு – நேரடி நியமனம் - மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் - தூத்துக்குடி – தமிழ்நாடு அமைச்சுப் பணி - தொகுதி IV பணிகள் - 2015-16, 2016-17 மற்றும் 2017-18ஆம் ஆண்டிற்கான தட்டச்சர் பதவிக்கான பட்டியல் பெறப்பட்டது - சார்நிலை அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு – திரு.மு.ரமேஷ்,மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டமை - பணி வரன்முறைசெய்து ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை :
1. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகள் எண் நிர்2/3664/2019 நாள் 04.03.2019.
2. தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண் அ1/512/2019 நாள் 05.03.2019.
3. அரசாணை எண் 130, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை(என்.1), நாள் 21.07.2008.

******

ஆணைகள்:

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக வேலைவாய்ப்புத் துறைக்கு திரு.மு.ரமேஷ் அவர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 1-இல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செயல்முறை ஆணைகளின் வாயிலாக தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் அடங்கும் தொகுதி–IV-இல் அடங்கிய தட்டச்சர் பணியிடத்தில் தற்காலிகப் பணி நியமனம் செய்யப்பட்டார். தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.மு.ரமேஷ் அவர்களுக்கு பார்வை 2-இல் காணும் தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள் வாயிலாக தற்காலிகப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தனியர் தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 06.03.2019 அன்று முற்பகல் தட்டச்சர் பணியில் சேர்ந்தார்.

(த. பி. பா)

Scanned with OKEN Scanner

இவர் தனது ஓராண்டுப் பணிக்காலத்தை 05.03.2020 பிற்பகல் நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து, திரு.மு.ரமேஷ், தட்டச்சர் அவர்களது பணி, இவர் பணியில் சேர்ந்த நாளான 06.03.2019 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

திரு.மு.ரமேஷ், தட்டச்சர் அவர்கள் அவர் பணியில் சேர்ந்த நாளான 06.03.2019 முற்பகல் முதல் தொடர்ச்சியான 3 ஆண்டுகளுக்குள் 2 ஆண்டு காலத்திற்கு (He is placed under probation for two years in the continuous period of three years) நிபந்தனைக்குட்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இத்தகுதிகாண் பருவக்காலத்தில், பார்வை 3-இல் காணும் அரசாணையின்படி, தகுதிகாண் பருவம் முடிப்பதற்கு தேவையான கணினி தொடர்பான கல்வித் தகுதி (Certificate in Computer on Office Automation) தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

இச்செயல்முறை ஆணைகளைப் பெற்றமைக்கான ஒப்புகை உடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உதவி இயக்குநர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்
தூத்துக்குடி.

பெறுநர்

திரு.மு.ரமேஷ்,
தட்டச்சர்
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
தூத்துக்குடி.

நகல்

1. பணிப்பதிவேடு
2. இருப்புக் கோப்பு-35